## நவம்பர் – 03 – வெள்ளி

### புனித மார்ட்டின் போறே

**எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவார்களாக! சீயோனே! உன் கடவுளைப் புகழ்வார்களாக! திபா. 147:12**

### முதல் வாசகம் : உரோமையர் 9 : 1 – 5

சகோதர சகோதரிகளே! கிறிஸ்துவைச் சார்ந்த நான் சொல்வது உண்மை, பொய்யல்ல. தூய ஆவியால் தூண்டப்படும் என் மனச்சான்றே நான் சொல்வதற்குச் சாட்சி. உள்ளத்தில் எனக்குப் பெருந்துயரமும் இடைவிடாத வேதனையும் உண்டு. என் சொந்த இனத்தைச் சேர்ந்த என் சகோதரர் சகோதரிகளுக்கு மீட்பு கிடைப்பதற்காக நான் கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்கு உள்ளாகக்கூட விரும்பியிருப்பேன். அவர்கள்தாம் இஸ்ரயேல் மக்கள் அவர்களையே கடவுள் தம் மக்களாக ஏற்றுக் கொண்டார். அவர்கள் நடுவில்தான் கடவுள் தம் மாட்சியை விளங்கச் செய்தார். உடன்படிக்கைகளும் திருச்சட்டமும் திருவழிபாடும் வாக்குறுதிகளும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. குலமுதல வர்களின் வழிவந்தவர்கள் அவர்கள் மனிதர் என்னும் முறையில் கிறிஸ்துவும் அவர்களிடமிருந்தே தோன்றினார். இவரே எல்லா வற்றுக்கும் மேலான கடவுள் என்றென்றும் போற்றுதற்குரியவர். ஆமென்.

**பதில்பாடல் :** ஜெருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக

### நற்செய்தி : லூக்கா 14 : 1 - 6

ஓய்வுநாள் ஒன்றில் இயேசு பரிசேயர் தலைவர் ஒருவருடைய வீட்டிற்கு உணவருந்தச் சென்றிருந்தார். அங்கிருந்தோர் அவரைக் கூர்ந்து கவனித்தனர். அங்கே நீர்க்கோவை நோயுள்ள ஒருவர் அவர்முன் இருந்தார். இயேசு திருச்சட்ட அறிஞரையும் பரிசேயரையும் பார்த்து, "ஓய்வுநாளில் குணப்படுத்துவது முறையா, இல்லையா?" என்று கேட்டார். அவர்கள் அமைதியாய் இருந்தனர். இயேசு அவரது கையைப் பிடித்து அவரை நலமாக்கி அனுப்பிவிட்டார். பிறகு அவர்களை நோக்கி, "உங்களுள் ஒருவர் தம் பிள்ளையோ மாடோ கிணற்றில் விழுந்தால் ஓய்வுநாள் என்றாலும் அதனை உடனே தூக்கிவிடமாட்டாரா?" என்று கேட்டார். அதற்குப் பதில் சொல்ல அவர்களால் இயலவில்லை.

**தியானம்:** தெரிந்துகொள்ளப்பட்ட இனமாகிய இவ்வுலக மக்களிடையே அவர் தனது வல்லமையை, மாட்சியை வெளிப்படுத்தி அவர்களை ஆசீர்வதித்தார். காரணம் அவர்கள் அவரது கட்டளையையும், நீதிநெறிகளையும் கடைப்பிடித்த தேயாகும். அதேபோன்று எங்களையும் தாயின் கருவறையில் உருவாகும் முன்பே தெரிந்தெடுத்தவர். அவரது கட்டளைகளைக் கடைப்பிடித்து அதன்படி வாழ கற்றுக் கொடுத்திருக்கின்றார். அதன்படி வாழ்வோமேயானால் எம்மையும் ஆசீர்வாதங்களினால் நிரப்பி தனது சீடர்களை அனுப்பியது போன்று நற்செய்தியைப் பறைசாற்றவும், நோய்களைக் குணப்படுத்தவும் பல நல்ல காரியங்களை செய்யவும் பயன்படுத்துவார். ஆனால் நாங்கள் நல்ல சகுனம், கெட்ட சகுனம், நேரம் காலம் என்று வேறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து அவர் ஆசீர்வாதத்தை இழந்துவிடுகின்றோம். ஆனால் படைப்பில் அனைத்தும் இறைவனுக்கு உட்பட்டதே என்பதை மறந்து விடுகின்றோம். அன்று நீர்க்கோவை நோயாளியை இயேசு குணப்படுத்தியபோது பரிசேயரும், சதுசேயரும் இயேசுவில் குற்றம்காணும் வகையில் உற்றுப்பார்த்த வண்ணமே இருந்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்து உங்களில் யாராவது உங்களது மாடோ, பிள்ளையோ கிணற்றினுள் விழுந்தால் அவற்றை நீங்கள் காப்பாற்ற மாட்டீர்களா"? என்று கேட்டார். (லூர்க். 14:5) இன்று நாங்களும் கூட மற்றவர்களுக்கு நன்மை செய்வதுமில்லை, அவர்கள் செய்தால் நன்றிக்கும் பதிலாக குற்றம் காண்பதில் கண்ணாயிருக்கின்றோம். சாதி, மத, இனம் என்று பலவகையான கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறு வாழ்ந்தால் எங்களையும் பார்த்து அவர்களிடம் கேட்டது போன்று எங்களிடமும் கேட்பார். இதனால் அவர் எமக்கு வழங்கவிருக்கும் ஆசீர்வாதங்களையும், அருட்கொடைகளையும் இழந்துவிடுகின்றோம். எனவே அவற்றை பெற்றுக் கொள்ள எமக்கு கொடுத்த கட்டளைகளை கடைப்பிடித்து, நேரத்தை காலத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி அவர் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம்.